செய்தி வெளியீடு எண்.24/2018 நாள்: 15.05.2018

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தபடி சென்னை மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பொது மக்கள் தங்கள் வீடுகளில் உள்ள கழிவு நீர் தொட்டியிலிருந்து கழிவுநீரை அகற்ற சென்னைக் குடிநீர் வாரியத்தின் மூலம் கழிவுநீர் அகற்றும் லாரியை குறைவான கட்டணத்தில் பதிவு செய்து கழிவுநீர் அகற்ற ஏதுவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் “Dial for Septic Tank Clearance” திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் (பகுதி I, பகுதி II, பகுதி III, பகுதி VII, பகுதி XI, பகுதி XII, பகுதி XIV & பகுதி XV) உள்ள பொது மக்கள் தங்கள் வீடுகளில் உள்ள கழிவு நீர் தொட்டியிலிருந்து கழிவுநீரை அகற்ற ரூ.650/– கட்டணமாக செலுத்தி 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் லாரியை பதிவு செய்து கொள்ளலாம்.

இப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் தங்கள் வீடுகளில் இருந்து கழிவு நீரை அகற்ற www.chennaimetrowater.tn.nic.in என்ற முகவரியிலோ அல்லது 044–4567 4567 என்ற சென்னைக் குடிநீர் வாரிய அழைப்பு மையத்தின் தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். (நுகர்வோர் வரி எண் மற்றும் அலைபேசி எண் அவசியம்).

இத்திட்டம் 15.05.2018 முதல் தொடங்கப்படவுள்ளது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்